செ.வெ.எண்: 16 நாள்: 07.02.2020

**மதுவிலக்கும் மற்றும் ஆயர் தீர்வைத்துறை சார்பில் கள்ளச் சாராயம் மற்றும் போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு பேரணியை கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தெய்வநாயகி அவர்கள் இன்று (07.02.2020 )துவக்கி வைத்து - விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொது மக்களுக்கு வழங்கினார்.**

கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில், இன்று ( 07.02.2020 ) மதுவிலக்கு ஆயத் தீர்வை துறை சார்பில் கள்ளச் சாராயம் மற்றும் போதைப்பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு பேரணியை கிருஷ்ணகிரி கோட்டாட்சியர் திருமதி.தெய்வநாயகி அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். தொடர்ந்து போதைப்பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு உதவி ஆணையர் ( ஆயம்) திரு.ப.முரளி, செய்தி மக்கள்தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**தொடர்ந்து கிருஷ்ணகிரி கோட்டாட்சியர் அவர்கள் தெரிவிக்கும் போது:**

கள்ளச் சாராயம் மற்றும் போதை பொருட்கள் பயன்படுத்துவோர் உடல் அளவிலும் மனதளவிலும் பல்வேறு பாதிப்பிற்க்கு உள்ளாகிறார்கள். நாளடைவில் மரணத்தை ஏற்படுத்தும், கண்பார்வை இழக்க நேரிடும். பசியின்றி உடல் நலம் கெடும், நிரந்தர உடல் நலம் கெடும், நிரந்தர உடல் ஊனத்தை ஏற்படுத்தும், நினைவாற்றல் பாதிக்கப்படும், நரம்பு தளர்ச்சி ஏற்படும், உடல் உறுப்புகள் செயலிழக்கச் செய்யும், குடும்பப் பாசம் விடுபடும், சமூகத்தில் மதிப்பு குறையும், தன்னிலை மறந்து சீர்கேடுகள் நிகழ்த்துவர், தனிமைப்படுத்தப்படுவீர் எனவே கள்ளசாராயம் மற்றும் போதை பொருட்களிலிருந்து விடுப்பட்டு உடலையும் மனதையும் காக்க வேண்டும். அவர்களின் குடும்ப வாழ்க்கை தரமும் உயரும். கள்ளச் சாராயம் (ம) போதைப் பொருட்கள் பற்றிய 24 மணி நேர கட்டணமில்லா தொலைபேசி 10581 என்ற எண்ணிற்கு புகார் தெரிவிக்கலாம். என கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பொதுமக்களிடம் எடுத்துரைத்தார்.

கள்ளச்சாராயம் மற்றும் போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு குறித்து கிருஷ்ணகிரி புனித அன்னாள் பெண்கள் பள்ளி மாணவியர்கள் மற்றும் அறிஞர் அண்ணா கல்லூரி மாணவ மாணவிகள் பதாகைகளை ஏந்தி சென்றார்கள். இப்பேரணியில் 300 மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கலந்துக்கொண்டனர். இப்பேரணி பெங்களூர் சாலை வழியாக சென்று அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகே நிறைவடைந்தது.

இந்நிகழ்ச்சியில் வட்டாட்சியர் திரு.ஜெயசங்கர், கோட்ட ஆய அலுவலர்கள் திரு.ராஜசேகர், திரு.கோவிந்தராஜ், சிறப்பு காவல் உதவியாளர் திரு.நாகபூசனம், காவல் உதவி ஆய்வாளர் திரு.ஜெயகீர்த்தி, போக்குவரத்து உதவி காவல் ஆய்வாளர் திரு.நாராயணன், மற்றும் பள்ளி மாணவ மாணவியர்கள் கல்லூரி மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.